**STARTING TIME 11.06 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 172/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 19.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **வாணி** Husband's Name :

Address :

Calling : Age :

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

10. அசல் வழக்கு எண் 172/2019–ல் உள்ள எ–அட்டவணையில் சர்வே எண் 170/3–ல் உள்ள 50 செண்ட் சொத்து எங்களுக்கு சொந்தம் என சொல்லியுள்ளோம் என்றால், சரிதான். அந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

11. வள்ளியம்மாளிடமிருந்து அந்த சொத்தை போடிநாயுடுவின் மகன் சீனிவாச நாயுடு எப்போது கிரையம் வாங்கினார் என்றால், சீனிவாச நாயுடு தனிப்பட்ட வகையில் வாங்கவில்லை, கூட்டுக் குடும்பத்திற்காக அனைவரும் சேர்ந்து கிரையம் பெற்றும், கர்த்தா என்ற வகையில் சீனிவாச நாயுடுவின் பெயரில் 01.09.1987 அன்று கிரையப் பத்திரம் எழுதப்பட்டது. சீனிவாச நாயுடுவின் பெயரில்

கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன், அந்த ஆவணம் வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தை சீனிவாச நாயுடு கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற அடிப்படையில் கிரையம் பெற்றதாக எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

12. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தை வள்ளியம்மாளிடமிருந்து எவ்வளவு தொகைக்கு கிரையம் பெறப்பட்டது என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் உள்ள தொகையை வள்ளியம்மாள், சீனிவாச நாயுடுவிடமிருந்து பெற்றுக் கொண்டு கிரையம் செய்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

13. தாவா எ–அயிட்ட சொத்துக்கான பட்டாவானது என் பெயரிலோ அல்லது மற்ற வாதிகளின் பெயரிலோ வழங்கப்பட்டதா என்றால், இல்லை. பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால், கிரையம் பெற்ற போது வள்ளியம்மாள் பெயரில் இருந்தது, அதன் பிறகு சீனிவாச நாயுடு பெயரிலும், 2012–ம் ஆண்டிற்கு பிறகு பிரதிவாதிகளின் பெயரிலும் உள்ளது.

14. வா.சா.ஆ.1 கிரையத்திற்கு பின்னிட்டு 2012–ம் ஆண்டில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யும் வரை தாவா எ–அட்டவணை சொத்தினை நானும் மற்ற வாதிகளும் சீனிவாச நாயுடு உடன் கூட்டாக அனுபவித்து வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா எ–அட்டவணை சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல், தீர்வை ரசீது உள்ளீட்டவைகள் என் பெயரிலோ மற்ற வாதிகள் பெயரிலோ இல்லை என்றால், சரிதான்.

15. கோவிந்தராஜ் நாயுடு என்பவர் 23.10.1977 அன்று காலமாகிவிட்டார் என்று சொல்வதற்கு இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

கோவிந்தராஜ் நாயுடு காலமான போது அவரது தகப்பனார் போடி நாயுடு உயிருடன் இருந்தார் என்றால், சரிதான். கோவிந்தராஜ் நாயுடு காலமான பிறகு அவரது மகன்களான 1, 2 வாதிகளும், அவர்களது தாயார், மணி நாயுடு, பக்தவச்சல நாயுடு, சீனிவாச நாயுடு, போடி நாயுடு ஆகியோர் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

16. போடி நாயுடுவின் மனைவி சுப்பம்மாளுக்கும், அவர்களது மருமகளான 1-ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றால், பெரிய பிரச்சனை இருந்தது இல்லை, வழக்கமான சிறு, சிறு பிரச்சனை தான் இருந்தது, எனக்கு 1999-ம் ஆண்டு தான் திருமணமானது, அதற்கு முன் நடந்த பிரச்சனைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

17. போடி நாயுடுவின் மனைவி சுப்பம்மாளுக்கும், அவர்களது மருமகளான 1-ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கும் இடையே இருந்த பிரச்சனை காரணமாக 1-ம் பிரதிவாதியின் கணவரான சீனிவாச நாயுடு 1979-ம் ஆண்டே தனிக்குடித்தனம் போய்விட்டார்கள் என்றால், சரியல்ல, 1990-ம் ஆண்டு வாய்மூல பாகம் ஏற்பட்ட போது தான் தனிக்குடித்தனம் போனதாக என் கணவர் என்னிடம் சொன்னார்.

18. 1979-ம் ஆண்டே 1 முதல் 6 வரை பிரதிவாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் கணவர் சீனிவாச நாயுடு தனிக்குடித்தனம் போய் ஆயர்பாடி கிராமத்தில் தனியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால், சரியல்ல. அந்த சமயத்தில் மேற்படி சீனிவாச நாயுடு சுமார் 10 ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு பயிர் செய்து 1 முதல் 6 வரை பிரதிவாதிகளுடன் வாழ்ந்து வந்தார் என்றால், சரியல்ல. எனக்கு 1999-ம் ஆண்டு தான் திருமணமானதாக சொல்வதால் 1979-ம் ஆண்டில் இருந்து 1999-ம் ஆண்டு வரை சீனிவாச நாயுடு குடும்பத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல, ஆனால் எனது

குடும்பத்தில் சொன்னார்கள்.

19. சீனிவாச நாயுடு கூட்டுக் குடும்பத்தில் இருந்து தனியாக வந்த பிறகு 19.12.1983 அன்று ஆயர்பாடி கிராமத்தில் ஒரு சொத்தை தனியாக கிரையம் பெற்றுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற சொத்தில் கட்டிய வீட்டில் தான் அவரது காலம் வரை வாழ்ந்து வந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆயர்பாடி கிராமத்தில் நான் குடியிருக்கிறேன் என்றால், சரிதான். ஆயர்பாடி கிராமம் கீழான்டை ஒத்தவாடை தெருவில் உள்ள காலி மனையில் சீனிவாச நாயுடு அவர் பெயரில் கிரையம் பெற்று வீடு கட்டி வாழ்ந்து வந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தினை எனது மாமனாரின் தகப்பனார் போடி நாயுடு உயிருடன் இருந்த போதே கிரையம் பெறப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

20. சீனிவாச நாயுடு 1979–ம் ஆண்டே தனிக்குடித்தனம் போய், குத்தகைக்கு பயிர் செய்து வந்த வருமானத்தை கொண்டு 01.09.1987 அன்று தாவா எ–அட்டவணை சொத்தினை வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் பேரில் தாவா எ–அட்டவணை சொத்தினை எவ்வளவு கிரையத் தொகைக்கு கிரையம் பெறப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது.

21. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலம் தாவா எ–அட்டவணை சொத்தினை சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற போது அவரது தகப்பனார் போடி நாயுடு உயிருடன் இருந்தார் என்றால், சரிதான். எனவே, வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற தாவா எ–அட்டவணை சொத்தானது தனிப்பட்ட சுயார்ஜித சொத்து என்றால், சரியல்ல. அந்த சமயத்தில் கூட்டுக் குடும்பம் இல்லை என்பதால், கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தைக் கொண்டு சீனிவாச நாயுடுவின் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று சொல்வது

பொய் என்றால், சரியல்ல.

22. எனது மாமனார் கோவிந்தராஜ் நாயுடு காலமான பிறகு சீனிவாச நாயுடுவை கூட்டுக் குடும்ப கர்த்தாவாக யார் நியமித்தார்கள் என்று சொல்கிறேன் என்றால், கூட்டுக் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் சேர்ந்து தான் கர்த்தாவாக நியமித்தார்கள். எந்த வருடம் அது போல் கூட்டுக் குடும்ப கர்த்தாவாக நியமித்ததாக சொல்கிறேன் என்றால், 1977-ம் ஆண்டு எனது மாமனார் காலமான போது நியமித்தார்கள். அந்த விவரத்தை எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

23. சீனிவாச நாயுடுவின் தகப்பனார் போடி நாயுடு உயிருடன் இருந்த போதே சீனிவாச நாயுடுவை எதற்காக கர்த்தாவாக நியமித்ததாக சொல்கிறேன் என்றால், அந்த சமயத்தில் போடி நாயுடுவிற்கு வயதாகிவிட்டது, அதனால் 2-வது மகனான சீனிவாச நாயுடுவை கர்த்தாவாக நியமித்தார்கள்.

24. போடிநாயுடு காலமான போது அவருக்கு வயது 74 என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. போடி நாயுடுவின் தகப்பனார் பெயர் நாதமுனி என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் இறப்பு சான்று போடி நாயுடுவின் இறப்பு சான்று என்றால், சரிதான். அதில் 17.12.1988 அன்று காலமான போடி நாயுடுவிற்கு 74 வயது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி இறப்பு சான்று **<u>பி.வா.சா.ஆ.1</u>**-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25. எனது மாமனார் கோவிந்தராஜ் நாயுடு கடந்த 1977-ம் ஆண்டு காலமான 11 ஆண்டுகள் கழித்து தான் அவரது தகப்பனாரான போடி நாயுடு 1988-ம் ஆண்டு காலமாகியுள்ளார் என்றால், சரிதான். எனவே, 1977-ம் ஆண்டு போடி நாயுடுவிற்கு 63 வயது என்றால், சரிதான். 1977-ம் ஆண்டு போடி நாயுடுவிற்கு வயதாகிவிட்ட காரணத்தினால் அவரது 2-வது மகன் சீனிவாச நாயுடுவை கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டுக் குடும்ப கர்த்தவாக நியமித்தார்கள்

என்ற விவரத்தை தாவாவில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால், சரிதான்.

26. எனது மாமனார் காலமான பிறகு 1977–ம் ஆண்டு சீனிவாச நாயுடுவை கூட்டுக் குடும்ப கர்த்தாவாக நியமித்து அவர் நிருவாகம் பார்த்து வந்தது என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. 1979–ம் ஆண்டே சீனிவாச நாயுடு கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார் என்றால், சரியல்ல.

27. தாவா எ–அட்டவணை சொத்து சீனிவாச நாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தை அவர் எப்போதும் கூட்டுக் குடும்ப சொத்தாக பாவித்து அனுபவித்து வந்ததில்லை என்றால், சரியல்ல. எனவே, சீனிவாச நாயுடு உயிருடன் இருக்கும் வரை அவர் தான் தாவா எ–அட்டவணை சொத்தை தனிப்பட்ட சொத்தாக பாவித்து அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் தனிப்பட்ட சொத்தாகவே அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

28. சீனிவாச நாயுடு 03.10.1989 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான். சீனிவாச நாயுடு 1979–ம் ஆண்டு கூட்டுக் குடும்பத்தை விட்டு தனியாக சென்று தாவா எ–அட்டவணை சொத்தினை கிரையம் பெற்ற விவரம் அவரது சகோதரர்களான 1, 2 வாதிகளுக்கு நன்கு தெரியும், அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

29. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப் பிரிவினையில் தாவா எ–அட்டவணை சொத்தை 1, 2 வாதிகளுக்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எழுத்து மூலமாக பிரித்துக் கொள்ளவில்லை, வாய்மொழி மூலமாக தான் பிரித்துக் கொண்டார்கள். அந்த வாய்மொழி பாகம் எந்த தேதியில், யார் முன்னிலையில், யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றால், 1990–ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில் இல்லை. எனது மாமியார், அவரது மகன்களான 1, 2 வாதிகளுக்கிடையே ஜெங்கால் மந்திரி

மகன் சம்பத் மந்திரி, கோவிந்த நாயுடு, பழனி நாயக்கர் ஆகியோர் முன்னிலையில் பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது. 1, 2 வாதிகள், அவர்களது தாயாரை தவிர வேறு யாரும் வாய்மூல பாகத்தின் போது இல்லையா என்றால், மணி நாயுடு, பக்தவச்சல நாயுடு, ஆனந்தம்மாள், வசந்தம்மாள் ஆகியோர் இருந்தார்கள்.

30. மேற்படி வாய்மூல பாகத்தின் போது தாவா எ–அட்டவணை சொத்துக்களை மட்டும் பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேனா அல்லது போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துக்களையும் பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேனா என்றால், தாவா எ–அட்டவணை சொத்து மட்டும் போடி நாயுடுவிற்கு சொந்தமான மற்ற சொத்துக்களையும் சேர்த்து தான் பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது.

31. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துகளையும், சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற தாவா சொத்துக்களையும் வாய்மூலமாக பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்லியுள்ளேனா என்றால், தாவா சொத்துக்களை பொருத்து மட்டும் தான் சொல்லியுள்ளோம், போடி நாயுடுவின் சொத்துக்கள் பற்றி சொல்லவில்லை.

32. நான் சொல்லும் வாய்மூல பாகத்தில், எந்தெந்த சொத்துக்கள் வாய்மூலமாக பிரித்துக் கொள்ளப்பட்டது, அதில் யார், யாருக்கு எவ்வளவு விஸ்தீரண சொத்தை பாகமாக ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. அதற்கு காரணம் என்னவென்றால், என் கணவர் தான் தாக்கல் செய்தார், அதனால் அந்த விவரம் அவருக்கு தான் தெரியும்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME: 12.09. P.M.**

YUVARAJ Digitally signed by YUVARAJ Date: 2025.08.19 16:10:49 +0530